சகோதரர்களின் ஐக்கியம்

உங்கள் வாழ்க்கையை வளமாக்கும் வல்லமையான தேவசெய்தி

J.சாம்ஜெபத்துரை

<u>இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்</u>

ஏறக்குறைய *7* ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் *200* ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* <u>இலவசமாக (மத்தேயு *10:8*)</u> உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்புதம் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வழியில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

<u>WhatsApp/SMS:</u> +91 90 190 490 70 / +91 7676 50 5599

<u>Email:</u> wordofgod@wordofgod.in

<u>Wishing you in the mighty name of Jesus Christ</u>

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely <u>free of cost (Matt 10:8)</u> forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

<u>WhatsApp/SMS:</u> +91 90 190 490 70 / +91 7676 50 5599

<u>Email:</u> wordofgod@wordofgod.in

சகோத்ரர்களின் ஐக்கியம்!

(THE UNITY OF THE BRETHREN)

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுபவர்:

J. சாம் ஜெபத்துரை

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு

கோடம்பாக்கம், சென்னை - 600 024

முதற் பதிப்பு : அக்டோபர் 1993
நன்கொடை ரூ. 5/-
வெளியீடு எண் : 338

இந்தப் புத்தகத்தை வெளியிட உதவி செய்த வர்களை வாழ்த்துகிறோம், ஆசீர்வதிக்கிறோம்.

Mrs. Jothimani Moses
Kottampatti, Madurai Dt
(In Memory of Late Mr R. Moses)

கர்த்தர் சீயோனிலிருந்து அவர்களை ஆசீர் வதிப்பாராக.

அச்சிட்டோர்

ஓரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

சகோதரர்களின் ஐக்கியம்!

"இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? அது ஆரோனுடைய சிரசின் மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும், எர்மோன் மேலும், சீயோன் பர்வதங்கள் மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்" (சங் 133:1-3).

இந்த சிறிய சங்கீதம் ஒரு இனிமையான அழகான ஆசீர்வாதமான சங்கீதம்! இதை வாசிக்கும்போதே என் உள்ளமெல்லாம் மகிழ்கிறது! சகோதரர்களின் ஐக்கியத்தை கர்த்தர் எவ்வளவு மேன்மையாய்ப் பார்க்கிறார் என்று அறிந்து கொள்ள முடிகிறது!

இன்று நாம் எல்லாரும் சகோதரர்களாய் ஒன்றாய் கூடி வந்திருக்கிறோம் தேவ ஊழியர்கள் எல்லாம் சகோதர பாசத்தோடும் சகோதர அன்பின் ஐக்கியத்தோடும் வந்திருக்கிறார்கள். நம்மைப் பற்றி அன்றைக்கே தாவீது ராஜா தீர்க்கதரிசன கண்களால் உணர்ந்து எழுதி வைத்தார்போலும். "சகோதரர் ஒருமித்து கூடி வருவது கர்த்தருக்கும் ரொம்ப சந்தோஷம்"

சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணும்போது கர்த்தர் என்ன செய்கிறார்? அங்கே என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார் (சங் 133:3). நாம் கர்த்தருடைய கரத்திலிருந்து ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ண வேண்டும்.

இந்த சங்கீதத்தின் மூலமாய் கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஆழமான செய்தியை புரிந்துகொள்ளுவதற்கு முன்பாக ஒரு முன்னுரையை சொல்ல விரும்புகிறேன். அதைக்குறித்து சங்கீதத்தின் ஆரம்பத்தில் அடைப்பு குறியில் ஒன்று எழுதப்பட்டிருக்கிறது. அது என்ன தெரியுமா? தாவீது பாடின ஆரோகண சங்கீதம்

ஆரோகணம் என்றால் என்ன? இசை சங்கீத ஞானம் உடையவர்கள் உடனே அதை சொல்லி விடுவார்கள். ஆரோகணம் என்பதற்கு ''ஏறுதல்'' என்று அர்த்தம் இசையில் 'ச ரி க ம ப த நி ச'' என்றால் ஏறுகிற தொனி உடையது என்பதாகும்.

சங்கீத புத்தகத்திலே இப்படிப்பட்ட பதினைந்து சங்கீதங்களை வாசிக்கிறோம். சங்கீதம் 120 முதல் 134 வரை மொத்தம் பதினைந்து சங்கீதங்கள் ஆரோகண சங்கீதங்கள் என்று அழைக்கப்படுகிறது.

கர்த்தரை ஆராதிக்க மலைகளின் மேல் உள்ள பட்டணமாகிய எருசலேமுக்கு நோராக ஏறிச்செல்லும்போது இஸ்ரவேல் ஜனங்கள் இந்த பாடல்களை பாடிக்கொண்டே ஏறுவார்களாம்.

மலை ஏற்றத்தின்போது இந்த பாடல்களை பாடுவது அவர்களுக்குள்ளே ஒரு பக்தி உணர்வை ஊட்டுகிறது. எருசலேம் தேவாலயத்தில் வாசமாய் இருக்கிற கர்த்தரைச் சந்திக்க அவர்களுடைய உள்ளத்தை ஆயத்தப்படுத்தி பக்குவப்படுத்திக் கொள்ளுவதற்கு ஏதுவாய் அமைந்தது. மட்டுமல்லாமல், தூரத்திலிருந்து நடந்து வந்ததினால் வந்த களைப்பு, மலை ஏற்றத்தினால் உள்ள சிரமங்கள் அவர்களுக்கு பெரிதாய் தெரிவதில்லை. ஆகவேதான் சங்கீதக்காரர்கள் ஆரோகண சங்கீதங்களை ஏராளமாய் இயற்றினார்கள்.

இந்த பதினைந்து ஆரோகண சங்கீதங்களும் எசேக்கியா ராஜா தனக்கு பதினைந்து ஆண்டுகள் ஆயுளை கூட்டிக் கொடுத்த ஆண்டவருக்கு நன்றி செலுத்தும்விதமாக பாடிக்கொண்டே ஒவ்வொரு ஆண்டும் மலையின் மேல் ஏறினுர் என்று வேத பண்டிதர்கள் குறிப்பிடுகிறுர்கள். நன்றியோடு கர்த்தரைத் துதிப்பது நம்மேல் விழுந்த கடமை அல்லவா?

இஸ்ரவேலர்கள் பொதுவாக வருஷத்திற்கு மூன்று பண்டிகைகளை எருசலேமிலே மிகவும் உற்சாகமாய் ஆசரிப்பார்கள். அவர்களுக்கு மிகவும் முக்கியமானது பஸ்கா பண்டிகை. இது ஒவ்வொரு ஆண்டும் இளம் வேனிற்காலத்தில் மிகவும் விமர்சனமாக கொண்டாடப் படும். உலகமெங்கும் சிதறி இருக்கிற யூதர்கள் இந்த பண்டிகையின்போது கட்டாயமாக எருசலேமுக்கு வந்து தொழுது கொள்ளுவார்கள்.

அதற்கு பின்பு கோடைக்காலம் ஆரம்பித்து விடும். கோடைக்காலத்தின் ஆரம்பத்திலே பெந்தெகொஸ்தே பண்டிகை கொண்டாடுவார்கள். அதற்காக பாடிக் கொண்டே மீண்டும் எருசலேமுக்கு வருவார்கள்.

மூன்ருவது முக்கியமான பண்டிகை இஸ்ரவேலரின் கூடார பண்டிகையாகும். இது இலையுதிர் காலத்திலே நடைபெறும். அப்பொழுது மூன்ருவது முறையாக அவர்கள் எருசலேம் தேவாலயத்திற்கு வருவார்கள்.

பஸ்கா பண்டிகை என்பது ஆட்டுக்குட்டி அடிக்கப் பட்டு எருசலேமிலிருந்து மீட்கப்படுவதற்கு நிழலாட்டமாய் இருக்கிறது. புதிய ஏற்பாட்டிலே கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே நமக்காக மரித்து சம்பாதித்துக் கொடுத்த விலையேறப் பெற்ற இரட்சிப்பை இது காண்பிக்கிறது.

பெந்தெகொஸ்தே பண்டிகை என்பது பரிசுத்த ஆவியின் பின்மாரி ஊற்றுதலை அடிப்படையாய் கொண்டிருக்கிறது. ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களில் 120

பேர் மேல்வீட்டறையிலே கூடி வந்தபோது பரிசுத்த ஆவியானவர் பொழியப்பட்டார் அல்லவா? ஆகவே பெந்தெகொஸ்தே பண்டிகை அபிஷேகம் ஊற்றப்படுத லுக்கு நிழலாட்டமாகும்.

கூடார பண்டிகை என்பது ஏழு நாட்கள் தனிமையாய் கர்த்தரோடு அமர்ந்திருக்கும் பண்டிகையாகும் இது இனி வரப்போகிற ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந் துக்கு நிழலாட்டமாய் இருக்கிறது. நம்முடைய சரீரமாகிய கூடாரங்களை விட்டு மத்திய ஆகாயத்தில் ஆத்தும நேசரை சந்தித்து ஏழு ஆண்டுகள் அவரோடு மகிழ்ச்சியாய் இருக்க போகிறோம்.

இஸ்ரவேலர்கள் இந்த மூன்று பண்டிகையின்போதும் சகோதரர்களாக ஒருமித்து தேவ சந்நிதானத்திலே கூடி வருவார்கள். அது நன்மையும் இன்பமும் மகிழ்ச்சியுமாக காணப்பட்டது.

நம் அருமை ஆண்டவர் தம்முடைய பிள்ளைகள் சமாதானத்தோடும், ஐக்கியத்தோடும், ஒருமிதத்தோடும் கூடி வருவதையே விரும்புகிறார் அப்படி கூடி வரும்போது அங்கே ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்.

பாபிலோன் சிறையிருப்புக்கு பிறகு ஆசாரியர்களும் லேவியர்களும் விடுதலை செய்யப்பட்ட பின்பு அவர்கள் எருசலேம் தேவலாயத்தில் கூடி வந்தார்கள். நெகேமியா, எஸ்றா போன்ற பக்தர்கள் மீண்டும் இந்த பண்டிகையை ஆசரிக்க துவங்கினார்கள். அப்பொழுது கூடி வந்த ஆசாரியர்கள் மேல் அபிஷேக தைலத்தை வார்த்து மீண்டும் இந்த பாடல்களை உற்சாகத்தோடு பாடினார்கள். என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இந்த சங்கீதம் தேவனுடைய ஊழியர்களை அபிஷேகம் பண்ணும்போது வாசிக்கப்பட வேண்டிய இனிமையான சங்கீதமாகும்

சகோதர, சகோதரிகள்!

இந்த சங்கீதத்தின் ஆரம்பத்தைப் பாருங்கள். ''சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுவது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமாயிருக்கிறது'' என்று ஆரம்பிக்கிறது!

கர்த்தர் நம்மை சகோதர, சகோதரிகளாக இணைத்திருக்கிறார். நமக்குள் நல்ல ஐக்கியத்தை தந்திருக்கிறார். நாம் ஒருமித்து வாசம் பண்ணுவது நன்மையும் இன்பமுமானது!

பழைய ஏற்பாட்டிலே சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டது மிகவும் குறைவானதுதான். அவர்களுக்குள் பலவிதமான வேறுபாடுகளும், உயர்வுகளும், தாழ்வுகளும் இருந்தது. ஆனால், புதிய ஏற்பாட்டிற்குள் வரும்போது சகோதரர்கள் என்ற பதத்திற்கு விசேஷித்த அர்த்தமுண்டு.

நம் அன்பு இரட்சகரை நம்முடைய மூத்த சகோதரராக காண்கிறோம். அவருடைய கிருபையினால் நாம் அவருடைய இளைய சகோதரர்களாக, சகோதரிகளாக இணைந்திருக்கிறோம்.

புதிய ஏற்பாட்டிலே சபையை நிர்மூலமாக்க எழும்பி வந்த கொடுமையான சவுலைப் பார்த்து ஆதி அப்போஸ்தலர்கள், ''சகோதரனே'' என்றுதான் அழைத்தார்கள். நம்முடைய சகோதரனாகிய சவுல் என்று கூப்பிடுகிறதைப் பாருங்கள். அது போலவே, நிருபங்களிலெல்லாம் ''சகோதரர்களே'' என்ற வார்த்தை நூற்றுக்கணக்கான முறை பயன்படுத்தப்படுகிறது.

நாம் சகோதரர்கள்தான். நாம் எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்திருந்தாலும், எந்த கிராமத்தில் பிறந்து எந்த பட்டணத்தில் படித்திருந்தாலும், படிப்பறிவு இருந்தாலும், இல்லாவிட்டாலும், சிலுவையண்டை வந்து நிற்கும்போது அந்த கல்வாரியின் இரத்தம் நம்மை ஒரே

சகோதரர்களாக இணைத்திருக்கிறது என்பதை உணருகிறோம். சிலுவையின் அருகே கைகோர்த்து தேவனே நாங்கள் உம்முடைய சகோதரர்கள் என்று சொல்லுகிறோம்.

நமக்கு ஒரே தகப்பன் உண்டு. அவர் பரலோகத்தில் இருக்கிற பரம பிதா. அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டிருக்கிறோம். நாம் ஒரே ஆவியால் தாகம் தீர்க்கப்பட்டு இருக்கிறோம். அந்த ஆவிதான் சத்திய ஆவியாகிய தேற்றரவாளன்.

என் ஆண்டவர் இந்தப் பூமியில் இருந்தபோது ஒரு முறை அவருடைய சொந்த தாயாரும், சகோதர, சகோதரிகளும் அவரைப் பார்க்க வந்திருந்தார்கள்.

இயேசு என்ன சொன்னார் தெரியுமா? யார் எனக்கு சகோதரர்கள்? யார் எனக்கு சகோதரிகள்? பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார் (மத் 12:50).

இந்த வேத வசனத்திலே சகோதரர்கள் யார் என்று நாம் அறிந்துக் கொள்ளுகிறோம். யார் யார் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறார்களோ அவர்கள்தான் கர்த்தருடைய சகோதரர்கள். இயேசு நம்முடைய மூத்த சகோதரனாக இருப்பது நமக்கு எத்தனை சந்தோஷம்!

சில வீடுகளில் பெற்றோருக்கு எல்லாமே பெண் பிள்ளையாய் பிறந்திருக்கும். அந்த பெண் மக்கள் வளரும்போது தங்களுக்கு ஒரு சகோதரன் இருந்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணுவார்கள். இனி அப்படி கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. இயேசு கிறிஸ்து தாமே நம்முடைய மூத்த சகோதரனாக இருக்கிறார்.

சகோதரர்கள் என்பது ஒரு கூட்டம் ஜனங்களை குறிக்கிறது. இவர்கள் ஒருமனமான சகோதரர்கள். ஐக்கியமான சகோதரர்கள்!

ஒரே தாயின் வயிற்றில் பிறந்ததினால் சகோதரன் என்று அழைக்கப்படும் அழைப்பு அல்ல இது! சகோதரத் துவம் சர்க்குருக்குள் நமக்கு கிடைக்கிற சகோதரத்துவ மாகும். இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களே இன்று "சகோதரர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். ...களாகிகளானாலும், ஊழியர்களானாலும் அவர்களே ...க்க பயன்படும் பதமே "சகோதரர்" என்பதாகும்!

நன்மை, இன்பம்!

சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுவது எத்தனை நன்மையானது! எத்தனை இன்பமானது! தாவீது அதை ...சரியத்தோடும், சந்தோஷத்தோடும் கூறுகிறார். அந்த நன்மையையும், இன்பத்தையும் ருசித்து எழுதுகிறார். ...பாக்கியமான அனுபவத்திற்குள் நம்மை வரும்படி ...வழைத்து எழுதுகிறார் அப்படி பூமியிலே நாம் ஒரு ...ப்படும்போது பரலோக சந்தோஷத்தை பூமிக்கு கொண்டுவர முடிகிறது.

சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுவதினால் ...ன்ன நன்மை உண்டாகிறது? ஒருவருடைய பாரத்தை ... சுமக்க முடிகிறது. ஒருவருக்கொருவர் ஜெபிக்க ...கிறது ஒருவரையொருவர் தூக்கிவிட முடிகிறது.

ஒரு சகோதரனுடைய உள்ளத்தில் தெய்வீக அன்பு ...ந்திருந்தால் மற்ற சகோதரர்களின் ஐக்கியம் அவர் ...வர் உள்ளத்தை அனல்மூட்டி எழுப்புகிறது.

ஒருவர் ஜெப ஆவியிலே குறைவுள்ளவராக இருந்தால் ...மவர்கள் இணைந்து ஜெபிக்கும்போது அவர்களுடைய ...ஜெபம் தூண்டி விடப்படுகிறது.

அடுப்பிலே நிறைய கட்டைகள் இருக்கிறது என்று ...வைத்துக் கொள்ளுங்கள் எல்லா கட்டைகளும் சேர்ந் ...தால் நன்றாக பற்றி பிடித்து எரியும்; ஒருவர் ...உள்ள அக்கினி மற்றவர் மேல் பரவும். ஒருவர்

மேலுள்ள ஆவியின் வரங்கள், இன்னொருவர் மேல் இறங்கும் அபிஷேகமும், வல்லமையும் பற்றியெரியும். இன்று கர்த்தர் நம்மை ஒரு மகிமையான அன்பின் கயிற்றினால் கட்டி ஒருமனமாக்கியிருக்கிறார்.

தேவனுடைய ஊழியக்காரர்களின் அபிஷேகம் உங்கள் மேல் இறங்கி விடுகிறது. அவர்களுக்கு கர்த்தர் கொடுத்திருக்கிற வரங்கள் உங்கள் வாழ்க்கையிலே விடுதலையையும், சமாதானத்தையும் கொண்டு வருகிறது. இன்று நாம் கூடி வந்திருக்கிறது எத்தனை பெரிய நன்மை!

நாம் கவலைகளை மறந்து கர்த்தரை துதிக்கிறோம். பிரிவினைகளை மறந்து கையோடு கை கோர்த்து கொள்ளுகிறோம். இதனால் தேசத்திற்காக பாரத்தோடு ஜெபிக்க முடிகிறது புதிய ஊழியர்களையும், மிஷனெரிகளையும் எழுப்ப முடிகிறது சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுவது எத்தனை நன்மை?

ஒரு முறை ஒரு பஸ் பயங்கரமான விபத்திற்குள்ளானது சிலர் மரித்தார்கள். சிலருடைய எலும்புகள் முறிவடைந்தது. அதில் ஒருவருடைய கரம் துண்டித்து தனியாய் கீழே விழுந்துவிட்டது.

இமைப்பொழுதில் அவர் நிலைமையை உணர்ந்து கொண்டார். கீழே விழுந்துக் கிடந்த தன்னுடைய கையை மறு கையிலே எடுத்தார். ஒரே ஓட்டமாக அருகில் இருந்த ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்து ஓடினார். டாக்டரிடத்திலே அந்த கையை கொடுத்துவிட்டு அப்படியே மயக்கமடைந்தார். உடனே டாக்டர்கள் அவசரமாய் ஆப்ரேஷன் செய்து அவருடைய கையை மீண்டும் இணைத்துவிட்டார்கள்.

சுகமடைந்த பின்பு அந்த சகோதரனைப் பார்த்துக் கேட்டார்கள். எப்படி இந்தக் கையை தூக்கிக் கொண்டு வேகமாக ஓடி வர முடிந்தது? உங்களுடைய சரீரத்தி

...ள்ள வலியையும், வேதனையையும் மறந்து இதை எப்படி ...க்கிக் கொண்டு ஓடினீர்கள் என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் சிரித்துக்கொண்டு என்னச் சொன்னார் ...யா? அது என்னுடைய கையல்லவா? என்னுடைய ...த்தின் அவயவம் அல்லவா? என் கையை இழந்து நான் ...படி இருப்பேன் என்றார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, நாம் சகோ...ர்கள் மாத்திரமல்ல, ஒரே சரீரத்தின் அவயவங்களாக ...ம் இருக்கிறோம். நம் மூத்த சகோதரனாகிய கர்த்தர் ...க்கு தலையாக இருக்கிறார்

வேதம் சொல்லுகிறது: சரீரத்திலே பிரிவினையுண்டா...மல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையா...க்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு ...கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்...க்கிறார். ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்...ட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். ...ங்கள் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்...களாயுமிருக்கிறீர்கள் (I கொரி 12:25-27).

சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுவது நன்மை...யானது! மட்டுமல்ல, அது இன்பமானதும்கூட! எப்படி ...இன்பமானது?

சகோதரர்கள் ஒருமித்து வாசம்பண்ணும்போது நாம் ...இன்பமாய் ஆண்டவரை துதிக்கிறோம். சந்தோஷமாய் ...க்கிறோம். ஆனந்தமாய் கர்த்தருக்குள் மகிழுகிறோம். ...லோக சந்தோஷம் நமக்குள் குடிவருகிறது.

வேதம் சொல்லுகிறது: பரலோக ராஜ்யம் புசிப்பும், ...குடிப்பும் அல்ல. அது நீதியும், சமாதானமும் பரிசுத்த ...ஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது என்று ...வேதம் சொல்லுகிறது.

நாம் வருஷத்திற்கு இரண்டு முறை திருப்பத்தூருக்கு வரும்போதெல்லாம் ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்படுகிறோம். ஊழியக்காரர்களின் ஐக்கியம், விசுவாசிகளோடு ஐக்கியம், எல்லா தேவனுடைய பிள்ளைகளின் ஐக்கியம் நமக்குள் மகா மகிழ்ச்சியை கொண்டு வருகிறது. மாத்திரமல்ல, உற்சாகப்படுத்திவிடவும் செய்கிறது. சபை பிரிவுகள், வேறுபாடுகளை மறந்து ஆவியானால் நிரப்பப்பட்டு களிகூருகிறோம்.

அநேகர் இந்தக் கூட்டங்களைக் குறித்து சந்தோஷமாய் சொல்லுகிறதை கேட்டிருக்கிறேன். ஐயா, இந்த கூட்டத்திற்கு வந்தேன் இரட்சிக்கப்பட்டேன்; கூட்டத்திற்கு வந்தேன் ஜெப வீரனாய் மாறினேன்; கூட்டத்திற்கு வந்தேன் அபிஷேகம் பெற்றுக்கொண்டேன்; ஆவியின் வரங்களை பெற்றுக்கொண்டேன். இன்பமாய் இருக்கிறது என்றுச் சொல்லுகிறார்கள்.

தேவபிள்ளையே, கர்த்தருடைய பிள்ளைகள் கூடி ஆராதிக்கும்போது அந்த ஆராதனைகளில் கலந்துக்கொள் அது நன்மையானது, இன்பமானது!

பெலன், அபிஷேகம்!

சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுவது நன்மையும் இன்பமுமானது மாத்திரமல்ல அது பெலனும் அபிஷேகமுமாய் இருக்கிறது.

பாருங்கள் ஒரு வீட்டில் நிறைய சகோதரர்கள் இருந்தால் அவர்களுக்கு அது ஒரு பெலன். மற்றவர்கள் எளிதாய் அந்த வீட்டை அற்பமாய் பேச மாட்டார்கள். அண்ணனுக்கு ஏதாவது ஒரு காரியம் என்றால் தம்பிமார் எல்லாம் உடனே எழும்பி அண்ணனுக்காக குரல் கொடுப்பார்கள்.

ஆனால் ஒரு வீட்டில் ஆண்களே இல்லாவிட்டால், சகோதரர்களே இல்லாவிட்டால் மற்றவர்கள் அற்பமாய்

எண்ணுகிறார்கள் பழித்து பேசுகிறார்கள். தட்டி கேட்பதற்கு ஆட்கள் இல்லை என்று ஏளனம் செய்வார்கள்.

சகோதரர்கள் ஐக்கியத்திலே பெரிய பெலன் உண்டு. கர்த்தர் சொன்னார். "ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்துவான்; இரண்டு பேர் பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள்" (உபா 32:30) சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணும்போது ஏற்படும் தேவபெலனை கூறவே கர்த்தர் இவ்விதமாய் கூறுகிறார்!

ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்துவான் என்றால் இரண்டுபேர் இரண்டாயிரம் பேரைத்தான் துரத்த முடியும். இங்கே பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள் என்று வாசிக்கிறோம். இரண்டுபேர் ஒருமனமாய் இணையும்போது தேவபெலனானது இரண்டு மடங்கு அல்ல பத்து மடங்கு அதிகமாய் வெளிப்படுகிறது.

சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ண குறைந்தது இரண்டு பேராவது வேண்டும். இரண்டுபேர் கிறிஸ்துவின் பாதத்தில் கூடும்போது நிச்சயமாகவே மூன்றாவது சகோதரனாக இயேசு அங்கே வருவார். பூமியிலே இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்தில் இருக்கும் தேவன் அதை வாய்க்கச் செய்வார்.

அப்போஸ்தலனாகிய பேதுருவின் ஊழியத்தை கவனித்துப் பாருங்கள். சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுவது நன்மையும் இன்பமும், பெலனையும் அவர் அறிந்திருந்தார். அவர் பிரசங்கம் பண்ண ஆரம்பித்தபோது பன்னிரெண்டு சீஷர்களும் அவருக்கு முன்பாக நின்றார்கள் (அப் 2:14). அதுதான் வெற்றியின் இரகசியம். அதுதான் ஜனங்கள் மூவாயிரம் ஐயாயிரம் என்று இரட்சிக்கப்படுவதின் மூலக்காரணம்.

சகோதரர்கள் ஒருமித்து ஜெபிக்கும் ஜெபம் வல்லமையுள்ளது! ஒருமித்து ஊழியம் செய்வது சத்துருவை முறியடிக்கக்கூடியது! ஒருமித்து கூடும்போது ஆசீர்வா

த்தையும் ஜீவனையும் கொண்டு வருகிறது! ஒருமித்த போர்வீரர்கள் வெற்றிமாலை சூடுவார்கள். அல்லேலூயா.

இயேசுகிறிஸ்து இந்த சகோதர அன்புக்காகவும், ஐக்கியத்திற்காகவும் பிதாவினிடத்திலே உருக்கமாய் ஜெபித்தார். "ஒருமனப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும்; நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும். நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்று உள்ளம் உருகி ஜெபித்தார்" (யோவா 17:23).

சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணும்போது அங்கே அபிஷேகம் இறங்குகிறது. II நாளா 5:12,13-ஐ வாசித்துப் பாருங்கள். அங்கே பூரிகைகளை ஊதுகிற நூற்றி இருபதுபேர் பூரிகைகளை ஊதி ஏகசத்தமாய் துதித்து பாடினபோது தேவனுடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிரப்பப்பட்டது.

சற்று கவனியுங்கள். பழைய ஏற்பாட்டில் நூற்றி இருபது சகோதரர்கள் கூடுகிறார்கள். அவர்களிடம் பூரிகைகள் இருக்கிறது. அதை ஊதி கர்த்தரைத் துதிக்கிறார்கள் அப்பொழுது தேவனுடைய மேகம் இறங்கி அந்த ஆலயத்தை மகிமையால் மூடியது.

புதிய ஏற்பாட்டிலே நூற்றி இருபது சகோதரர்கள் மேல் வீட்டறையிலே கூடினார்கள். சகோதரர்களாக ஒருமித்து கூடி வந்த அந்த ஐக்கியத்தினால் பெரிய அபிஷேகம் அன்று எருசலேமில் ஊற்றப்பட்டது. அக்கினி மயமான நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து இறங்கியது. ஒரு பெரிய முன்மாரியின் அபிஷேகம் ஆதி அப்போஸ்தல நாட்களில் கரை புரண்டு ஓடினது.

இந்தக் கூட்டத்தில் ஏறக்குறைய பத்தாயிரம் பேர் அமர்ந்திருக்கிறீர்கள். நீங்கள் ஒருமனமாய் கூடி வந்தி

ருக்கிறதினாலே கர்த்தர் எவ்வளவு பெரிய காரியத்தை உங்கள் மூலமாய் செய்வார். ஒருமனமாய் பாடுபடுங்கள் ...டயோடு கைக்கோர்த்து தோளோடு தோள் சேர்த்து ...லுங்கள். அவர்கள் எல்லாரும் ஒருமனப்பட்டு ஒரே ...டத்தில் வந்திருந்தார்கள் என்று அப் 2:1-ல் நாம் வாசிக்கிறோமே.

தெருக்கள்தோறும், கிராமங்கள் தோறும், பட்டணங் ...ள் தோறும் ஜெபக்குழுக்களை உருவாக்குங்கள், ஊக்க ...ாய் ஜெபியுங்கள், ஒருமனதோடு ஊழியம் செய்யுங் ...ள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் பின்மாரி வல்லமை ...ாய் ஊற்றப்படும்!

கிறிஸ்தவ மார்க்கத்தின் மேன்மை என்னவென்றால் அது சகோதரர்களின் ஐக்கியத்தில்தான் இருக்கிறது. ...கோதரர்களோடு ஜெபத்தில் ஆவியில் ஐக்கியம் கொள் ளுங்கள். எங்கெங்கெல்லாம் எழுப்புதல் கூட்டங்கள் நடக்கிறதோ, நல்ல முகாம்கள் நடக்கிறதோ, அங்கெங் கெல்லாம் ஓடி ஓடிப் போய் கலந்து கொள்ளுங்கள்.

சகோ. எசேக்கியா ப்ரான்சிஸ் அருமையான வல்ல மையின் முகாம்களை நடத்துகிறார். சகோ. டி. ஜி. எஸ். தினகரன் அவர்கள் பத்து நாட்கள் எழுப்புதல் முகாம்களை நடத்துகிறார் அதைப்போல் சகோ. மோகன் சி. லாசரஸ் ஆத்தும ஆதாயம் முகாம்களை நடத்துகிறார்கள் அங்கெல் லாம் அபிஷேகம் ஊற்றப்படுகிறது ஆவியின் வரங் களைக் குறித்து அறிந்துகொள்ளுவதற்கு ஏதுவாய் இருக் கிறது!

சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுவது எத்தனை நன்மை, எத்தனை இன்பம், எத்தனை பெலன், எத்தனை அபிஷேகம்! அபிஷேக மழையிலே நனைந்து மகிழ்கிற நாட்கள் இது! ஒவ்வொருநாளும் ஆண்டவர் வழிய வழிய உங்களை அபிஷேகம் பண்ணுவார்.

இன்று அநேகர் தேவனுடைய பிள்ளைகளின் ஐக்கியத்திற்கு விரோதமாய்ப் பேசுகிறார்கள். நான்கு சகோதரர்களாய் நாங்கள் இணைந்து கர்த்தருக்காய் நிற்பது அநேகருடைய உள்ளத்தில் பொறாமை தீயை வளர்க்கிறது. ஆத்துமபாரம் இல்லாதவர்கள் குறை கூறலாம், ஈவு இரக்கமற்று எழுதலாம். ஆனால் நாம் அதைப்பற்றி அக்கறைப்பட வேண்டியது இல்லை

சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணும்போது கர்த்தர் அங்கே ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுவார். இது தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற பெரிய வாக்குத்தத்தம். ஆகவே நாம் அதை உறுதியாய்ப் பற்றிப் பிடித்துக்கொள்ளுவோம்.

ஒரு வேடிக்கையான கதை ஒன்று உண்டு. அது உங்களுக்கு தெரியுமா? ஒரு ஊரில் ஒரு பக்திமான் இருந்தார். அவர் எந்த சபையிலும் சேர மாட்டார். எந்த சபை விசுவாசியோடும் ஐக்கியம்கொள்ளமாட்டாராம்.

அப்படிப்பட்ட அந்த பக்தனுக்கு சகோதர ஐக்கியத்தைப் பற்றிய பாடத்தை கற்றுக்கொடுக்க ஒரு தேவதூதன் விரும்பினான். ஆகவே, அவரை ஆவிக்குள்ளாக்க உயரமான ஒரு ஸ்தலத்திற்கு கொண்டு சென்றான்.

அவர் பார்த்தபோது ஒரு பெரிய அறையிலே அநேகம் பேர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் மிகுந்த பசியோடும், தாகத்தோடும் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது ஒரு தேவதூதன் வந்து அவர்கள் சாப்பிடுவதற்கென்று அருமையான பிரியாணியை ஏராளமாக வைத்தார்கள்.

இன்னொரு தேவதூதன் வந்தான் ஒவ்வொருவருடைய கைகளிலும் நீளமான கரண்டியை கட்டினான். தேவதூதன் சரி, நீங்கள் சாப்பிடலாம் என்றுச் சொல்லி உத்தரவு கொடுத்தான்.

அவர்கள் கையில் கட்டப்பட்டிருந்த கரண்டியால் சாப்பாட்டை அள்ளினர்கள். ஆனல், கைகளை மடக்கி அதை சாப்பிட முடியவில்லை. காரணம், அந்த கரண்டி நீளமாக மடக்க முடியாதபடி கைகளில் கட்டப்பட்டிருந்தது. பசியோடு குவித்ததினுல் அவசரமாக சாப்பிட விரும்பினவர்கள் சாப்பிட முடியாமல் தடுமாறினர்கள்.

இதை பார்த்த ஒருவர் நேராக பிரியாணிக்குள் குதித்தார். மற்றவர்கள் போட்டி போட்டுக்கொண்டு அதன் மேல் விழுந்தார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் சாப்பிட எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தார்கள் முடியவில்லை. பிரியாணி எல்லா பக்கமும் சிதறி போய்விட்டது. அவர்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டதுதான் மிச்சம்.

தேவதூதன் அந்த பக்தனை அடுத்த ஒரு அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கேயும் நிறைய பேர் பசியோடு உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய கைகளிலேயும் பெரிய கரண்டிகள் கட்டப்பட்டிருந்தது.

தேவதூதன் அவர்களைப் பார்த்து சரி, இப்பொழுது சாப்பிடலாம் என்றுச் சொன்னான். அவர்கள் அவசரம் அவசரமாக சாப்பாட்டை அள்ளிகொள்ளவில்லை. ஒருமனமாய் கர்த்தர் கொடுத்த ஆகாரத்திற்காக ஸ்தோத்திரம் செலுத்தினர்கள்.

முதலில் ஒருவர் சாப்பாட்டை அள்ளினர். கரண்டியால் எடுத்து பக்கத்தில் உள்ளவருக்கு நீட்டி கொடுத்து, நீங்கள் முதலில் சாப்பிடுங்கள், மிகவும் பசியோடு இருக்கிறீர்கள் என்று அவர்கள் வாயில் பிரியாணியை கொடுத்தார்.

கைகளில் கட்டப்பட்டிருந்த அந்த கரண்டியினுல் தனக்கு உண்ண முடியாதே தவிர மற்றவர்களுக்கு கொடுக்க முடிந்தது. இப்படி ஒவ்வொருவராக மற்றவர்களுக்கு கொடுத்ததினுல் கொஞ்சம் நேரத்துல் எல்லோரும்

சந்தோஷமாய், திருப்தியாய் சாப்பிட்டு முடித்தார்கள். அங்கு அடிபிடியும் இல்லை சண்டை சச்சரவும் இல்லை. தெய்வீக சமாதானமே அங்கே நிலவினது. ஆகவே தான் சங்கீதக்காரன் சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுவது எத்தனை நன்மை எத்தனை இன்பம் என்று எழுதுகிறார்.

அபிஷேக தைலம்!

சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுவதை எதற்கு ஒப்பிட்டு சொல்லலாம் என்று சங்கீதக்காரன் எண்ணி விட்டு, அது ஆரோனுடைய சிரசில் ஊற்றப்பட்டு அவனுடைய தாடியிலே வழிகிற நல்ல அபிஷேக தைலத்திற்கு ஒப்புமையாக கூறுவதைக் காண்கிறோம்.

பழைய ஏற்பாட்டிலே கர்த்தர் அபிஷேக தைலத்தை தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் சிரசில் வார்த்து ஒழுங்கு பண்ணியிருந்தார். கர்த்தருடைய பணியைச் செய்வதற்காக அவர்கள் வேறு பிரிக்கப்பட்டு அபிஷேக தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள்

பழைய ஏற்பாட்டில் முக்கியமாக மூன்று அபிஷேகங்கள் இருந்தது. 1 ராஜாக்களின் அபிஷேகம் 2. தீர்க்கதரிசிகளின் அபிஷேகம் 3 ஆசாரிய அபிஷேகம் இந்த மூன்று அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் ஜனங்கள் மத்தியில் இருந்து வேறு பிரிக்கப்பட்டு கர்த்தருடைய பணியை செய்ய முன் வந்தார்கள்.

அபிஷேகத்திலே காணக்கூடிய பகுதியும் இருந்தது காணக்கூடாத பகுதியும் இருந்தது. ஒருவர் மேல் அந்த அபிஷேக தைலம் வார்க்கப்படும்போது எல்லா ஜனங்களும் அதைக் காண்பார்கள் அவர்கள் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என்பதை புரிந்துகொள்ளுவார்கள். அவர்களைக் கனப்படுத்தி மேன்மைப்படுத்துவார்கள்.

ஆனல் இந்த அபிஷேகத்தில் காணப்படாத பகுதியும் உண்டு கர்த்தருடைய ஆவியானவர் அந்த நிமிடம் முதல் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் மேல் வந்து தங்கியிருப்பார். எந்த நோக்கத்திற்காக அவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்டார்களோ அதை நிறைவேற்ற ஞானமும் ஆலோசனையும் தருவார் அந்த ஊழியத்தை வல்லமையோடு செய்வதற்கு தைரியம் கொடுப்பார்.

சிலர் ஆசாரியர்களாய் அபிஷேகம் பண்ணப்படும் போது அவர்கள் தேவனுக்கு முன்பாக நின்று ஜனங்களுக்காக பலி செலுத்துவார்கள். தேவ ஜனங்களுக்காக பரிந்து பேசுவார்கள். தேவ ஜனங்களை கர்த்தருடைய நாமத்தினல் ஆசீர்வதிப்பார்கள்.

சிலர் தீர்க்கதரிசிகளாய் அபிஷேகம் பண்ணப்படும் போது கர்த்தர் தீர்க்கமான பார்வையை தந்தருளுவார். வருங்காலத்தை முன் அறிவிக்கக்கூடிய தேவனுடைய மனதை விளங்குவார்கள் தேசத்துக்கு சொல்ல வேண்டிய செய்திகள் ஜனங்களுக்கு அறிவிக்க வேண்டிய காரியங்களை கர்த்தர் அவர்கள் மூலமாக அறிவிப்பார்.

சிலரை கர்த்தர் ராஜாக்களாய் அபிஷேகம் பண்ணும் போது தேவ ஆவியானவர் அவர்களுக்கு ஆளுகையைத் தருவார். ஜனங்களை அந்த ராஜாக்களுக்கு கீழ்ப்படியும்படி ஜனங்களுடைய இருதயத்தை திருப்பிக் கொடுப்பார். சத்துருக்களை அந்த ராஜாக்களுக்கு முன்பாக முறியடிப்பார்.

அபிஷேகத்திற்கு பின்புதான் ஊழியம் ஆரம்பிக்கிறது. அபிஷேகம் என்றல் தேவனுடைய பெலத்தோடு தேவனுடைய ஊழியத்தை செய்வதாகும் நம்முடைய சுய பெலத்தோடு கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய கர்த்தர் நம்மை அழைக்கவில்லை. ஆனல் கர்த்தருடைய பெலத்தோடு கர்த்தருடைய சித்தத்தின்படி கர்த்தருடைய பாதையிலே ஊழியம் செய்யும்படி தேவன் நம்மை அழைக்கிறர்

அபிஷேகம் இல்லாமல் அநேகர் மாம்சத்தில் ஊழியத்தில் இறங்கி விடுகிறார்கள். அழைப்பு இல்லாமல் பிரவேசித்து விடுகிறார்கள். பிறகு அவர்களால் ஊழியம் செய்ய முடியாமல் தோல்வியோடுகூட தடுமாறுகிறார்கள்.

இயேசு கிறிஸ்துவைப் பாருங்கள். அவர் அபிஷேகம் பெற்ற பிறகுதான் ஊழியத்தை ஆரம்பித்தார். முப்பது வயது வரை அதற்காக காத்திருந்தார். அவர் ஞானஸ்நானம் பெற்றபோது கர்த்தருடைய ஆவியானவர் புறாவைப்போல் அவர் மேல் இறங்கி வந்தார். "கர்த்தருடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார் சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க அவர் என்னை அபிஷேகம் பண்ணினார்" என்று சொல்லி தம் ஊழியத்தை வல்லமையோடே துவங்கினார்.

சீஷர்களைப் பாருங்கள். அவர்கள் அந்த அபிஷேகத்திற்காக மேல்வீட்டறையில் ஜெபத்தோடு காத்திருந்தார்கள். ஏனென்றால் கர்த்தர் அவர்களிடம் நீங்கள் உன்னத பெலத்தால் நிரப்பப்படுகிற வரையிலும் எருசலேமில் காத்திருங்கள் என்று சொல்லியிருந்தார். அந்த உன்னத பெலனை பெற்ற பிறகே அவர்கள் ஊழியத்திற்கு சென்றார்கள்.

அப் 1:8-ஐ வாசித்துப் பாருங்கள். "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்."

அபிஷேகமே கர்த்தருக்குச் சாட்சியாக நிற்க நம்மை பெலப்படுத்துகிறது. அந்தகார வல்லமைகளை முறியடிக்கிறது. சத்துரு கொண்டு வருகிற சவால்களைச் சந்திக்க முடிகிறது. கர்த்தரே தேவன் என்று நிரூபிக்க முடிகிறது. அபிஷேகம் இல்லாமல் செய்யப்படுகிற ஊழியத்தில் அதிகமான பலனை காண முடியாது.

பழைய ஏற்பாட்டிலே பெரும்பாலும் ஒருவருக்கு ஒரு வகையான அபிஷேகம்தான் கொடுக்கப்பட்டது. ஆசாரியர் என்றால் அதற்காகவே அவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்டு ஆசாரிய ஊழியத்தை செய்தார்கள். சிலர் தீர்க்கதரிசிகள் என்றால் தீர்க்கதரிசிக்கான அபிஷேகம் மாத்திரமே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஒருவர் ஒரு குறிப்பிட்ட அபிஷேகத்தில்தான் பூரணமாய் நிரம்பி இருப்பார்.

அதே நேரத்தில் சில வேளைகளில் சில தாசர்கள்மேல் இரண்டு வகையான அபிஷேகம் இருந்ததையும் காண முடியும். உதாரணமாக மெல்கிசேதேக்கின் மேல் இரண்டு அபிஷேகம் இருந்தது. அவர் உன்னத தேவனுடைய ஆசாரியனாகவும் இருந்தார். அதே நேரம் சாலேமின் ராஜாவாகவும் இருந்தார்.

தாவீதின்மேல் இரண்டு அபிஷேகங்கள் இருந்தன. தீர்க்கதரிசியின் அபிஷேகத்தோடு ஆவியில் நிரம்பி அவர் சங்கீதங்களை எழுதினார். அதே நேரம் இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டார்.

அதே நேரம் இயேசு கிறிஸ்துவைப் பாருங்கள் அவரிலே மூன்று அபிஷேகம் இருந்தது. யூதரின் ராஜா என்று அழைக்கப்பட்டார். சிலுவையிலே தன்னையே பலியாகக் கொடுத்து பிதாவினுடைய வலதுபாரிசத்தில் பிரதான ஆசாரியனாகவும் வீற்றிருக்கிறார். அதே நேரம் அவருடைய உபதேசங்கள், பிரசங்கங்கள் எல்லாம் தீர்க்கதரிசனம் நிறைந்ததாக விளங்குகிறதையும் அறிகிறோம் ஆம் அவர் பிரதான ஆசாரியன், மகா தீர்க்கதரிசியானவர் அதே நேரம் ராஜாதி ராஜாவானவர்

பழைய ஏற்பாட்டில் ஆரோனுடைய சிரசின் மேல் ஊற்றப்பட்ட அபிஷேகம் அவனுடைய தாடி அங்கிகளில் வழிந்தது. புதிய ஏற்பாட்டில் அந்த அபிஷேகம் கிறிஸ்துவின் தலையின்மேல் ஊற்றப்பட்டிருக்கிறது. அது கிறிஸ்துவின் சரீரத்தில் இறங்குகிறது. நாமே அவருடைய சரீரமா

[illegible] சபை. ஆகையால் நம்மிலே அந்த அபிஷேகம் நிரம்பி [illegible]க்கிறது. இயேசுவில் மூன்று வகையான அபிஷேகம் இருக்கும் என்றால் இயேசுவின் சரீரமாகிய சபையிலும் அந்த மூன்று அபிஷேகங்கள் நிரம்பி வழிய முடியும்.

வெளி 1:6-ஐ வாசித்துப் பாருங்கள். அங்கே கர்த்தர் [illegible] ஆசாரியர்களாக, ராஜாக்களாக அபிஷேகம் பண்ணியிருக்கிறார் என்பதை அறிகிறோம். அதுபோலத்தான் [illegible] தீர்க்கதரிசியாகவும் அபிஷேகம் பண்ணியிருக்கிறார்.

[illegible]. நீ தேவனுடைய சரீரமானால் அந்த [illegible] உன் மேல் இறங்கி வருகிறது. நீ தேவனுடைய [illegible] உன்னதமானவருடைய தீர்க்கதரிசி. ராஜாதி [illegible] பிள்ளையாகிய ராஜா என்பதை மறந்து [illegible]

[illegible]ரோனுடைய சிரசில் மேல் ஊற்றப்பட்ட அந்த [illegible] பாருங்கள். ஏதோ கொஞ்சமாய் அவர்கள் [illegible]. அது ஒரு பெரிய அபிஷேகம். அந்த அபிஷே[illegible]ல் ஊற்றப்பட்டதோடு நின்றுவிட[illegible] மேலும், அங்கிகளின் மேலும் வழிந்தது. [illegible] கொம்பிலே தைலத்தை [illegible] ஊற்றியிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

[illegible] பண்ணப்பட்ட அந்த ஆரோன் நடந்து சென்றபோது அவருடைய அடிச்சுவடுகள் எல்லாம் [illegible] அடிச்சுவடுகளாக விழுந்திருக்[illegible] அந்த அபிஷேக கால் தடத்தை பின்பு வந்த ஜனங்கள் [illegible]. என்ன பேசி இருந்திருப்பார்கள்? [illegible] அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு ஊழியர் போயி[illegible] மனிதன் இந்த வழியாய் கடந்து சென்[illegible] விட்டு சென்ற அடிச்சுவடுகள்தான் [illegible] அபிஷேகத்தினால் பயன் அடைந்திருப்

தேவபிள்ளையே, நீ நடந்து செல்லுகிற அடிச்சுவடுகளை உலகத்தார் பார்க்க வேண்டும். எப்படிப்பட்ட அடிச்சுவடுகளை நீ விட்டு செல்லுகிறாய்? உன் அடிச்சுவடுகளை மற்றவர்கள் பின்பற்றக்கூடிய அபிஷேகத்தின் அடிச்சுவடுகள் தானா? அல்லது உன் அடிச்சுவடுகள் பாவ அடிச்சுவடுகளா? கர்த்தருக்கு பிரியமில்லாத அடிச்சுவடுகளா? பாதாள வழியாய் அழைத்துச் செல்லுகிற அடிச்சுவடுகளா? சிந்தித்துப் பார்.

இயேசுவின் மேல் அபிஷேகம் ஊற்றப்பட்டபோது அது அவருடைய வஸ்திரங்களில் எல்லாம் நிரம்பி இருந்தது. அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் தொட வேண்டும் என்று பலர் விரும்பினார்கள். அப்படி தொட்டவர்கள் எல்லாம் சொஸ்தமானார்கள். பன்னிரெண்டு ஆண்டுகாலமாய் பெரும்பாடுள்ள ஸ்திரீ அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டபோது உடனே அவள் தெய்வீக சுகத்தை பெற்றுக்கொண்டாள். காரணம் அந்த அபிஷேகம்தான்.

தேவபிள்ளையே, ஆரோனைப் பார்க்கிலும் பெரியவர் நம்முடைய மத்தியிலே இருக்கிறார். வானம் அவருடைய சிங்காசனம் பூமி அவருடைய பாதபடி. அவருடைய வஸ்திரத்தின் தொங்கலால் இந்த இடம் முழுவதும் நிரம்பி இருக்கிறது. அவருடைய வஸ்திரத்தின் தொங்கலின் மகிமையை இன்றைக்கு உணருகிறோம்.

கர்த்தர் நம்மை அபிஷேகம் பண்ணும்போது அந்த அபிஷேகம் நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்திற்கு போதுமானதாய் இருக்கிறது. கிறிஸ்துவின் வஸ்திர தொங்கல் எப்படி இருந்ததோ அதுபோலவே அப். பவுலின் சரீரத்திலுள்ள உறுமால்களின் மேலும் கச்சையின் மேலும் அந்த அபிஷேகம் இருந்தது. அவைகளைக் கொண்டு வந்து வியாதியஸ்தர்கள் மேல் போட்டபோது அவர்கள் எல்லாரும் சொஸ்தமானார்கள்.

பேதுருவினுடைய அபிஷேகம் எத்தனை விசேஷமானது! அவருடைய நிழலிலும்கூட கர்த்தருடைய அபிஷேகம் இறங்கி இருந்தது ஆகவே வியாதிஸ்தர்களைக் கொண்டு வந்து அவருடைய நிழலாகிலும் படும்படி வைத்தார்கள். அவர்கள் எல்லாரும் சொஸ்தமானார்கள்.

பழைய ஏற்பாட்டில் ஆரோனுடைய சிரசைப் பார்க்கிறோம் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் சிரசைப் பார்க்கிறோம். ஆரோனுடைய சிரசில் ஊற்றப்பட்ட அபிஷேகத்தைப் பார்க்கிலும் கிறிஸ்துவின் மேல் விசேஷ அபிஷேகம் நிரம்பி இருந்தது. தேவன் அவருக்கு ஆவியை அளவில்லாமல் கொடுத்திருந்தார் என்று யோவான் **3**:34-லே வாசிக்கிறோம் ஆரோனைப் பார்க்கிலும் பெரியவர் நம் ஆண்டவர் அல்லவா?

சவுலும் ராஜாதான் தாவீதும் ராஜாதான். ஆனால் அவர்களுடைய அபிஷேகத்திற்குள் எவ்வளவு பெரிய வித்தியாசம் இருந்தது! சவுல் குப்பி தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார். ஆனால் தாவீதோ கொம்பு தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார். சவுலின் மூலமாய் கர்த்தர் செய்ததைப் பார்க்கிலும் தாவீதின் மூலமாய் பெரிய காரியங்களைக் கர்த்தர் செய்தார்.

எலியாவின் மேலும் அபிஷேகம் இருந்தது. எலிசாவின் மேலும் அபிஷேகம் இருந்தது. ஆனால் கர்த்தர் எலியாவைக் கொண்டு செய்த அற்புதங்களைப் பார்க்கிலும் எலிசாவைக் கொண்டு அதிகமான அற்புதங்களைச் செய்தார். எலிசாவுக்கு இரட்டிப்பான ஆவியின் வரங்களைத் தந்தார்.

அதுபோலவே புதிய ஏற்பாட்டிலே ஏழு மூப்பர்களை தெரிந்தெடுத்தார்கள். ஏழு மூப்பர்களுக்குள்ளே ஸ்தேவானின் மேலும், பிலிப்புவின் மேலும் அதிகமான அபிஷேகம் இருந்தது. அவர்கள் மற்றவர்களைப் பார்க்கிலும் கர்த்தருக்காக பெரிய காரியங்களைச் செய்தார்கள்.

தேவபிள்ளையே, உன் மேல் உனக்குக் கொடுத்தி ருக்கிற அபிஷேகத்திலே வளர்ந்து பெருகுவாயாக. உன் ஆவியின் வரங்களை அனல் மூட்டி எழுப்பி விடு. எல்லா வற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவர் உன்னுடைய ஆவி ஆத்துமா சரீரத்தை நிரப்பியிருக்கிறார். என் பாத்தி ரம் நிரம்பி வழிகிறது என்று தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிப்பாயாக.

நம்முடைய மூத்த சகோதரராகிய இயேசு நம்முடைய மத்தியிலே இருக்கிறார் நாம் அவருடைய சொந்த சகோதரர்களாய் கூடி வந்திருக்கிறோம் கிறிஸ்துவின் மேல் இருக்கிற அந்த அபிஷேகம் இன்று நம்மேல் இறங்கி வருவ தாக. அவருடைய வஸ்திர தொங்கல் நாம் எல்லாரையும் ஆவிக்குள்ளாக்குகிறது. நாம் எழும்பி பிரகாசிக்க அவர் உதவி செய்வாராக.

எர்மோன் மலையின் பனி!

சகோதரர்கள் ஒருமித்து கூடி வருவதை கர்த்தர் ஆரோனுடைய சிரசில் ஊற்றப்பட்ட தைலத்திற்கு ஒப்பிடுகிறார் மட்டுமல்ல, எர்மோன் மலையில் உள்ள பனித் துளிக்கும் ஒப்பிட்டு கூறுகிறார்.

எர்மோன் மலை என்பது இஸ்ரவேலில் உள்ள ஒரு உயர்ந்த சிகரமாகும் இது இன்று சீரியா நாட்டின் பகுதிக் குள் இருக்கிறது. தாவீதின் நாட்களில் அது இஸ்ரவேல் தேசத்தின் வடகோடியில் அமைந்திருந்த பெரிய மலை தொடராகும். இந்த பகுதியை யோசுவா யுத்தம் செய்து பிடித்தார். எர்மோன் என்பதற்கு ''பரிசுத்த பர்வதம்'' (Holy mountain) என்பது அர்த்தமாகும்.

அந்த மலை மிகவும் உயர்ந்ததாய் இருந்ததினால் மலை சிகரங்களில் எல்லாம் வெண்மையான பனி மூடிக் கொண் டிருந்தது. பனி உருகும்போது அந்த பனி வடது புறமாய் இறங்கி மற்ற சிறு சிறு பர்வதங்களை எல்லாம் நிரப்பும்.

பனி என்றால் என்ன? அது அபிஷேகத்தையே குறிக்கிறது. குளிரப் பண்ணுகிற ஒரு அபிஷேகம். புத்துணர்ச்சியை தரக்கூடிய ஒரு அபிஷேகம். உள்ளத்தை மகிழ்விக்கிற ஒரு அபிஷேகம்.

வேதத்தில் அபிஷேகத்தை பல காரியத்திற்கு ஒப்பிட்டு சொல்லுகிறதை காணலாம். அபிஷேகம் அக்கினிக்கு ஒப்பிடப்படுகிறது, புறாவுக்கு ஒப்பிடப்படுகிறது, காற்றுக்கு ஒப்பிடப்படுகிறது, நதிக்கு ஒப்பிடப்படுகிறது. எண்ணெய்க்கு ஒப்பிடப்படுகிறது, அதுபோலவே அபிஷேகத்தை வேதம் பனிக்கும் ஒப்பிட்டு சொல்லுகிறது

எர்மோன் மலையில் பனி பொழியப்பட்டிருக்கும் மரங்களைப் பாருங்கள். அவைகள் ஓங்கி வளர்ந்து ஒன்றாய் நிற்கிறது. எர்மோன் மலையிலே பலத்த சேதுரு மரங்கள் உண்டு. அவைகள் கெம்பீரமாக மலையிலே பச்சையாக செழுமையாய் நின்றுகொண்டிருக்கின்றன. சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுவதற்கு அடையாளமாய் அந்த மரங்கள் அருகில் அருகிலே ஐக்கியமாய் நிற்கின்றன.

''பனி'' என்பது உபதேசத்தை குறிக்கிறது உபா 32:2-இல் நாம் வாசிக்கிறோம்: ''மழையானது இளம்பயிரின் மேல் பொழிவதுபோல, என் உபதேசம் பொழியும்; பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல, என் வசனம் இறங்கும்'' (உபா 32:2).

உபதேசத்தையும் வசனத்தையும் கொண்டு வருகிறவர்கள்தான் தீர்க்கதரிசி. அவன் பரலோகத்திருந்து இறங்கும் பனித்துளியை போன்றவன். பரலோக செய்திகளை சகோதரர்களுக்கு அறிவிக்கிறவன். தூர பார்வையை உடையவன் தன் வாயையும் உள்ளத்தையும் கர்த்தரோடு இணைத்துக்கொண்டவன் கர்த்தர் உரைக்கிறார் என்று அதிகாரத்தோடு முழங்குபவன்.

சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணும்போது கர்த்தர்தாமே அந்த தீர்க்கதரிசியின் அபிஷேகத்தை

அங்கே ஊற்றுகிறார் இன்றைக்கு நீங்கள் தேவனால் அபிஷேகம் பெறுவீர்கள். கர்த்தர் உங்கள் மேல் தீர்க்கதரிசியின் அபிஷேகத்தை ஊற்றுகிறார். நாம் சகோதரர்களாய் கூடி வந்திருக்கிறதினாலே கர்த்தர் நிச்சயமாகவே நம்மை அபிஷேகம் பண்ணுவார். சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுவது நன்மையும் இன்பமுமானது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளுவீர்கள்.

சீயோன் மலையிலே...!

தேவனுடைய அபிஷேகம் எர்மோன் மலையோடு இணைந்தது மாத்திரமல்ல அது சீயோன் பர்வதத்தோடும் கூட இணைந்தது!

சீயோன் என்றால் என்ன? சீயோன் என்றால் மகா ராஜாவின் நகரம். அது ராஜாக்களின் அபிஷேகத்தைக் காண்பிக்கிறது. இஸ்ரவேலில் உள்ள எல்லா வாசஸ்தலங்களைப் பார்க்கிலும் கர்த்தர் சீயோனை தம்முடைய வாசஸ்தலமாக தெரிந்துகொண்டார். சீயோனைக் கட்டி தம் மகிமையிலே வெளிப்படுவார்.

சங் 149:2 சொல்லுகிறது: ''இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில் மகிழவும், சீயோன் குமாரர் தங்கள் ராஜாக்களில் களிகூரவுங்கடவர்கள்.''

சங் 110:2 சொல்லுகிறது: ''கர்த்தர் சீயோனிலிருந்து உமது வல்லமையின் செங்கோலை அனுப்புவார்; நீர் உம்முடைய சத்துருக்களின் நடுவே ஆளுகை செய்யும்.''

இந்தக் கூட்டத்திலே ராஜாவின் அபிஷேகம் நம் மேலும் ஊற்றப்பட்டிருக்கிறது. கர்த்தர் உங்களுக்கு ஆளுகையையும் அதிகாரத்தையும் தந்தருளுவார். வரங்களையும், வல்லமையையும் தருவார். நீங்கள் ராஜாக்கள்!

நம்மை ராஜாவாக்கினார் என்று வேதம் தெளிவாய் சொல்லுகிறது. வெளி 1:6-ஐ வாசித்துப் பாருங்கள்.

நம் தேவன் ராஜாதி ராஜா. நாம் ராஜாக்கள். அவர் மகா தீர்க்கதரிசியானவர். நாம் தீர்க்கதரிசிகள் அவர் பிரதான ஆசாரியன். நாம் ஆசாரியர்கள்!

சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணும்போது கர்த்தர் ராஜாக்களின் அபிஷேகத்தை ஊற்றிவிடுகிறார். நம்மை அவர் அற்பமாய் காண்பதில்லை ராஜாக்களாய் காண்கிறார். அனாதைகளாய் காண்பதில்லை. ராஜ குமாரத்திகளாகக் காண்கிறார்

இந்த இடத்திலிருந்து நீங்கள் கடந்து செல்லும்போது ராஜாக்களைப் போல நடந்து செல்ல வேண்டும் நான் ராஜாதி ராஜாவின் பிள்ளை. ராஜ குமாரன் என்ற அந்தஸ்தோடு வாழுவேன். அந்த அபிஷேகத்தை காத்துக்கொள்ளுவேன், ராஜாவின் பிள்ளையாய் ஜெயங்கொண்டவனாய் விளங்குவேன் என்று தீர்மானம் செய்து கொள்ளுங்கள்!

இன்னறுக்கு அநேகர் இந்த தரிசனம் இல்லாததால் எகிப்திலுள்ள அடிமைகளைப்போல உட்கார்ந்திருக்கிறார்கள். கானானை சுதந்தரிக்க பிரியமில்லாமல் எகிப்தியின் ஆளோட்டிகளுக்கு செங்கல் சுட்டு கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் அநேகர் இன்று தாங்கள் ராஜாக்கள் என்கிற உணர்வு இல்லாமல், "பாபிலோன் ஆறுகளின் அருகே உட்கார்ந்து சீயோனை நினைத்து அழுது கொண்டிருக்கிறார்கள்."

தேவபிள்ளையே, இந்த கடைசி நாட்களிலே மாம்சமான யாவர் மேலும் கர்த்தர் ஆவியை ஊற்றியிருக்கிறார். நிச்சயமாகவே உன்மேல் அந்த அபிஷேகம் இறங்கி வருகிறது. அவர் உன்னை ராஜாவாக ஆசாரியனாக அபிஷேகம் பண்ணுகிறார்.

I யோவா 4:17-ஐ தியானித்துப் பாருங்கள். "ஏனென்றால், அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில்

...ப்படுகிறோம்" என்று வேதம் சொல்லுகிறது. அவர் ராஜாவாய் இருக்கிறபடியால் நாம் ராஜாக்களாய் இருக்கிறோம். அவர் அபிஷேகத்தில் நிரம்பியிருக்கிறபோது நாமும் அபிஷேகத்தில் நிரம்பியிருக்கிறோம்.

கர்த்தர் ஆதாமை உருவாக்கியபோது ஒரு ராஜாவாகத்தான் உருவாக்கினார். ராஜாதி ராஜாவின் ஸ்தானத்தை அவனுக்குக் கொடுத்தார். அந்த ஸ்தானத்தை அவனுக்கு [illegible] கொடுத்தார் [illegible] மேலும் ஆளுகையைக் கொடுத்தார். ஆதி 1:28-ல் கர்த்தர் சொன்னார் "நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி ஆண்டு கொள்ளுங்கள்"

"ஆண்டுகொள்ளுங்கள்" என்ற வார்த்தையை கவனித்துப் பாருங்கள். அதுதான் ராஜாக்களின் அபிஷேகம். ஆதாம் தான் ஒரு ராஜா என்கிற அழைப்பின் மேன்மையை உணர்ந்துகொள்ளவில்லை. அதற்கு பாத்திரமாக நடந்துகொள்ளவில்லை. சாத்தானுக்குக் கீழ்ப்படிந்து தன் ஆளுகையை விற்றுப்போட்டான். ஆகவே சாத்தான் ஆதாமின் தலைக்கு மேலாய் படம் எடுத்து ஆடும் நாகம் போல மனுஷனுக்கு மேலாய் வலுசர்ப்பமாய் ஆளுகை செலுத்துகிறான்.

கிறிஸ்து சிலுவையிலே அவனுடைய ஆளுகையை முறித்தார். அவனை பாதாளமாக்கினார். அவனுடைய தலையை நசுக்கினார். இன்று ஆளுகையையும் அதிகாரத்தையும் கர்த்தர் நமக்குத் கொடுத்திருக்கிறார். ராஜாவாக நம்மையே அபிஷேகம் பண்ணியிருக்கிறார்!

சங் 47:3 சொல்லுகிறது, "ஜனங்களை நமக்கு வசப் படுத்தி, ஜாதிகளை நம்முடைய பாதங்களுக்குக் கீழ்ப் படுத்துவார்."

தேவனுடைய பிள்ளையே, கிறிஸ்துவின் மேலிருந்த அபிஷேகம் இன்று உன்மேல் இருக்கிறது. இதை நீ உணருவாயா? விசுவாசிப்பாயா? ஏற்றுக் கொள்ளுவாயா? நீ

தான் ஆண்டவருடைய ஆசாரியன்! நீ தான் தேவனுடைய தீர்க்கதரிசி! நீ தான் ராஜாதி ராஜாவுக்கு முன்பாக ராஜ குமாரன்! இந்த அபிஷேகத்தோடு ஊழியம் செய்து வெற்றி வாழ்க்கை பெற்றுக்கொள்.

கிறிஸ்துவின் வருகை நெருங்கி விட்டது ஒரு பெரிய சேனையாக நாம் அவருக்கு எதிர்கொண்டு போக வேண்டும். சகோதரர்களாகிய நாம் கையோடு கைக்கோர்த்து சேனையாய் மாறுவோம். இது ஒருமனப்பட்ட சேனை! அன்பின் ஐக்கியமுள்ள சேனை!

சேனைகளின் அதிபர் நம்மை நோக்கிப் பார்க்கிறார். சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்.

ஒவ்வொருநாளும் ஏசாயா 61-ம் அதிகாரம் 1,2,3 ம் வசனங்களை வாசித்துப் பாருங்கள். தேவனுடைய அபிஷேகம் உங்கள் மேல் இறங்குகிற வரங்களை உங்கள் விசுவாச கண்கள் காணட்டும்.

''கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார் இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும் நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்

பினார்: அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்"
(ஏசா 61:1-3).

எல்லாரும் எழுந்து நிற்போம். கைகளைத் தட்டி உற்சாகமாய் சொல்லுங்கள் கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். அவர் என்னை அபிஷேகம் பண்ணியிருக்கிறார்

இதோ தேவனுடைய அபிஷேகம் உங்கள்மேல் இறங்கி வருகிறது தேவனுடைய ஆவியானவர் தன் கைகளிலே அபிஷேக தைலத்தோடு உலாவிக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவர்மேலும் அந்த அபிஷேகத்தை ஊற்றுகிறார். இதோ அந்த அபிஷேகம் உங்கள் மேல் ஊற்றப்படுகிறது. ஏற்றுக்கொள்ளுங்கள். அபிஷேகத்தினால் நிரப்பப்படுங்கள்

தேவபிள்ளையே, உன்னை அனாதை என்று எண்ணாதே, திக்கற்றவன் என்று சொல்லாதே. நீ தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவன் கர்த்தர் உன்னை மேன்மையாய் பார்க்கிறார்.

கர்த்தரை நோக்கிப் பார் அவர் உன் பரமபிதா, அவர் உன்னை நேசிக்கிறவர், அவர் உன்னை அபிஷேகம் பண்ணுகிறவர், உன் மேல் அபிஷேக தைலத்தை வார்த்து ஊழியத்திற்கென்று தகுதிப்படுத்துகிறவர். கைகளைத் தட்டி அந்த அபிஷேகத்தை பெற்றுக்கொள்.

கர்த்தருக்காக ஊழியம் செய்ய வேண்டுமென்றால் இதுவே அருமையான தருணம். இதுவே அதற்கான நேரம். கர்த்தர் உன்னை நிச்சயமாகவே ஆசீர்வதிப்பார் எல்லாரும் அவருக்கு கனத்தையும் மகிமையையும் செலுத்துவோம். ஆமென், அல்லேலூயா!

எமது பிரசங்க புத்தகங்கள்!

306.	அபிஷேகத்தில் பெருகுவது எப்படி?	5	00
307.	யார் கர்த்தருடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பார்கள்?	5	00
308.	கிருபையில் நிலைத்திருப்பது எப்படி?	5	00
309.	கர்த்தரை எங்கே சந்திக்கலாம்?	5	00
310.	உன்னை தேடும் இயேசு!	5	00
311.	நான்கு நங்கூரங்கள்!	5	00
312.	நீர் என்னை காண்கிற தேவன்!	5	00
313.	கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்!	5	00
314.	துதியின் வாசல்கள்!	5	00
315.	பரலோகத்தின் வாசல்!	5	00
316.	ஆவியின் நான்கு அனுபவங்கள்!	5	00
317.	அப்படியே மறுபடியும் வருவார்!	5	00
318.	இரட்சணியத்தைக் கண்டேன்!	5	00
319.	கர்த்தர் உங்கள் முன்னே போவார்!	5	00
320.	அஸ்திபாரங்களுள்ள நகரம்!	5	00
321.	வருகையின் உவமானங்கள்!	5	00
322.	இயேசு நமக்காக எப்படி ஜெபிக்கிறார்?	5	00
323.	சுவிசேஷத்தின் திறவுகோல்கள்!	5	00
324.	தேவனுடைய ஐசுவரியங்கள்!	5	00
325.	காயங்கட்டும் இயேசு!	5	00
326.	சிலுவையின் மேன்மை என்ன?	5	00
327.	அரைகள் கட்டப்படட்டும்!	5	00
328.	எலும்புகள் உயிரடையுமா?	5	00
329.	சிலுவையும் தேவ பெலனும்!	5	00
330.	அடைக்கப்பட்ட தோட்டம்!	5	00
331.	என்னவெல்லாம் நமக்கு உண்டு?	5	00
332.	ஆவிக்குரிய வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுங்கள்!	5	00
333.	எல்ஷடாய்!	5	00
334.	மகா ஞானமுள்ளவைகள்!	5	00
335.	ஒருவருக்கும் தூரமானவர் அல்ல!	5	00
336.	மிகவும் அன்புகூர்ந்தானே!	5	00

ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்துமா பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 400 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. ஜெபத்துரை அவர்கள் இந்நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அனேக ஆவிக்குரிய புத்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம் :

சாம் ஜெபத்துரை, M. A.,

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.